# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 095 · சனிக்கிழமை Saturday · 04.07.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# தமிழக பட்ஜெட்: 2வது நாளாக முதலமைச்சர் விஜய் அதிகாரிகளுடன் ஆலோசனை




முதலமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் சட்டசபை கூட்டத்தொடர் இம்மாத இறுதியில் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதில் 2026–2027–ம் ஆண்டுக்கான முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. இதற்கான முன்னேற்பாடுகள் தற்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் எந்தெந்த திட்டங்கள் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டும் என்பதை முதலமை ச்சர் விஜய் ஆய்வு செய்து வருகிறார். த.வெ.க. சார்பில் அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக மகளிர் உரிமைத் தொகை ரூ.2500, ஆண்டுக்கு 6 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் உள்ளிட்ட அறிவிப்புகளை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆய்வு செய்வதாக தெரிகிறது.

இந்த நிலையில் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய திட்டங்கள் பற்றி முதலமைச்சர் விஜய் துறை வாரியாக ஆலோசனை நடத்தி வருகிறார். நேற்று உணவு, கூட்டுறவு மற்றும் வருவாய்த்துறை சம்பந்தமாக ஆய்வு மேற்கொண்டார். இதனை தொடர்ந்து 2–வது நாளாக இன்று சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் விஜய், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் என். ஆனந்த், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா மற்றும் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை மேற்கொண்டார்.

நெடுஞ்சாலைத் துறையில் புதிதாக என்னென்ன திட்டங்களை செயல்படுத்தலாம். எவ்வளவு கிலோமீட்டருக்குபுதிய சாலைகள் அமைக்கலாம் என்பது பற்றி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். வருகிற 22–ந்தேதி வரை பட்ஜெட் ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட உள்ளது. ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு கோடி ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும் முதலமைச்சர் விஜய் ஒப்புதல் பெற்று பட்ஜெட் தயாரிக்கப்படும். அதன் பிறகு பட்ஜெட்டுக்கு முழு வடிவம் கிடைக்கும்.

# தி.மு.க. எம்.எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணன் கைது; தலைவர் மு.க.ஸ்டாலின், உதயநிதி, கனிமொழி கண்டனம்



சென்னை: திமுக எம்.எல்.ஏ அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்ட நிலையில், சீர்கெட்டு போயிருக்கும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கக் காட்டாத வேகத்தை, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரை கைது செய்வதில் தவெக அரசு காட்டுவதாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் விஜய் குறித்து அவதூறு பேசியதாக தொடரப்பட்ட வழக்கில்,திமுக எம்.எல். ஏவும், முன்னாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணனை காவல்துறையினர் அதிரடியாக கைது செய்தனர். அவரின் மீதான கைது நடவடிக்கைக்கு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், திமுக எம்.பி கனிமொழி ஆகியவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடெங்கும் சீர்கெட்டு போயிருக்கும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கக் காட்டாத வேகத்தை, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரை கைது செய்வதில் காட்டியிருக்கிறது என கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட அவர், "முன்னாள் அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை காவல்துறைகைது செய்துள்ளதை வன்மையாக கண்டிக்கிறேன்.

தமிழ்நாடெங்கும் சீர்கெட்டு போயிருக்கும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கக் காட்டாத வேகத்தை, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரை கைது செய்வதில் காட்டியிருக்கிறது #SofaModel அரசு.

அவதூறு பேசி – பொய் பழிகளை அள்ளி வீசுவது மட்டும் தான் அரசியல் என்று செயல்படும் ஆளுங்கட்சியின்

இந்த அராஜகப் போக்கை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொய் வழக்காலும் – கைது நடவடிக்கைகளாலும் கழகத்தை முடக்கலாம் என்று நினைக்கும்

இந்த Reels அரசின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது" எனத் தெரிவித்துள்ளார்.

ஆணவம் அழிவிற்கு வழி என குறிப்பிட்டுள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், "முதலமைச்சரை அவதூறாகப் பேசினார் என்று முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களைக் கைது செய்துள்ளது 'Take Diversion' அரசு.

தொகுதியில் ஆய்வு மேற்கொண்டு மக்கள் பணியில் ஈடுபட்டு இருந்தவரை, அவசர அவசரமாகக் கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது? சினிமா ஆக்‌ஷன் பாணியில் போலீஸ் ராஜ்ஜியம் நடத்திக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர்.

கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்மணி திருவைகுண்டம் தவெக சட்டமன்ற உறுப்பினர் மேல் கூறியுள்ள புகாரில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத 'தூயசக்தி ஆட்சி', அந்த வழக்கில் ஏன் இந்த அவசரத்தைக் காட்டவில்லை?

தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் கொலை, கொள்ளைகளையும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களையும் தடுக்க வக்கில்லாமல் அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசின் மாற்றம் இதுதானா?

அவதூறு வழக்கில் கைது செய்வதாக இருந்தால், இன்றைய அமைச்சர்கள் பேசும் பேச்சுக்கு எல்லாம் எத்தனை பேரைக் கைது செய்வது? வாக்களித்த மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாமல், குதிரைபேரத்தின் மூலமாகத் தனது நாற்காலியைத் தக்க வைத்து – விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளைக் கைது செய்து காலம் கடத்திவிடலாம் எனநினைக்கிறார் முதலமைச்சர்" எனக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதேபோன்று, தவெகவின் இதுபோன்ற அடக்குமுறைக்கு திமுக அடிபணியாது எனகுறிப்பிட்ட எம்.பி கனிமொழி, "அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை தவெக அரசின் காவல்துறை கைது செய்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர், தனது தொகுதியில் ஆய்வுப் பணியை மேற்கொண்டிருந்தபோது அராஜகமான முறையில் அவரை கைது செய்திருக்கிறது இந்த தவெக அரசு. இதுபோன்ற அடக்குமுறைகளுக்கு எல்லாம் ஒருபோதும் திமுக அடிபணியாது" என்று தெரிவித்துள்ளார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் / ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# "மதுராந்தகம் இடைத்தேர்தலில் வென்றாக வேண்டும்" மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேச்சு



தமிழக சட்டசபை தேர்தலுக்குப்பின் மாநில அரசியல் களம் பல்வேறு அதிரடி மாற்றங்களை சந்தித்து வருகிறது. தேர்தலில் த.வெ.க. தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த நிலையில் காங்கிரஸ் உள்பட பிற கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது.

அதேவேளை,த.வெ.க. அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பின்போது த.வெ.க.வுக்கு ஆதரவாக அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 25 பேர் வாக்களித்தனர். இதனால் அ.தி.மு.க.வில் குழப்பம் ஏற்பட்டது. மேலும், அ.தி.மு.க.வின் முக்கிய நிர்வாகிகள் பலரும் அக்கட்சியில் இருந்து விலகி த.வெ.க.வில் இணைந்த வண்ணம் உள்ளனர்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், கட்சி நிர்வாகிகள் பலரும் த.வெ.க.வில் இணைந்து வருகின்றனர். குறிப்பாக, நேற்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம். ஆர். விஜயபாஸ்கர் த.வெ.க.வில் இணைந்தனர். இந்த நிகழ்வு அ.தி.மு.க.வுக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், அ.தி.மு.க. மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று சென்னை ராயப்பேட்டையில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அதிமுகவின் வளர்ச்சி, அடுத்தகட்ட செயல்பாடு, களநிலவரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடைபெற்றதாக கூறப்படுகிறது.

மதுராந்தகம் இடைத்தேர்தல்

இந்நிலையில் செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:–

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வெற்றிவெற்றி பெற்றாக வேண்டும். எல்லோருக்கும் உரிய பங்களிப்புடன், உள்ளாட்சி தேர்தலில் வாய்ப்பு வழங்கப்படும். கட்சியில் இருந்து விலகிச் செல்பவர்கள் போகட்டும். தொண்டர்கள் இருக்கும் கட்சி அதிமுக. அவர்கள் நமக்கு பக்கபலமாக இருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம் வடுகப்பட்டியில் உள்ள அருள்மிகு பெருமாள் சுவாமி திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் மற்றும் திரு நன்னீர் ராட்டு திருவிழா அருள்மிகு வீரிய காரி பெருமாள் சுவாமி திருக்கோயில்.. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டாவது கும்பாபிஷேகம் என். கண்ணன் பட்டாசாரியார் லட்சுமி நாராயண கோவில் அர்ச்சகர் தலைமையில் அர்ச்சகர்கள் வேத மந்திரங்களை சொல்லி கும்பாபிஷேகம் ஆனி மாதம் 18ஆம் தேதி 02;07;26. வியாழக்கிழமை காலை 11:00 முதல் 11:30... கும்பாபிஷேக விழா நடைபெற்றது. விழா குழு தலைவர் டி எஸ் சேகர் கும்பாபிஷேக திருப்பணி குழு முனியாண்டி பரம்பரை பூசாரி அண்ணாதுரை வெங்கட் பெருமாள் சுதா கருப்பையா நாகராஜ்.மற்றும் வடக்குப்பட்டி காம கவுண்டன்பட்டி மதுரை சென்னை வாழும் ஊர் பங்காளிகள் கௌரவ ஆலோசர்கள்.. பாலகிருஷ்ணன் சந்திரசேகர் சுப்பிரமணி பொன்ராஜ் மற்றும் பலர் அன்னதானம் மற்றும் வரவேற்பு குழு பொறுப்பாளர்கள் ஹரிபாபு குருசாமி பி டி எஸ் சரவணன் பகவதி ராஜ் ஜானகிராம் சீனிவாசன் திருமுருகன் சங்கர் பாபு மற்றும் பலர் கலந்து கொண்டு பக்தர்களுக்கு தண்ணீர் பாட்டில்கள் அன்னதான நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சுற்றுவட்டார ஊர்களில் இருந்தும் வெளியூர்களிலிருந்தும்.உறவினர்கள் நண்பர்கள் பக்த கோடி பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இந்தியாவின் முதல் அதிநவீன குகு டென்டல் கிளினிக் பிரம்மாண்ட துவக்க விழா நிகழ்ச்சி கோவையில் நடைபெற்றது



பல் மருத்துவத் துறையில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில், இந்தியாவின் முதல் சி.பி.சி.டி ஒருங்கிணைக்கப்பட்ட '3டி ஃபேஸ் ஸ்கேன் இம்ப்ளான்ட்ஸ் சென்டர்' கோவையில் துவங்கப்பட்டது. 'குகு டென்டல் கிளினிக்ஸ்' நிறுவ னத்தின் இந்த புதிய கிளை, உலகத்தரம் வாய்ந்த நவீன தொழில்நுட்பங்களுடன், உங்கள் புன்னகையை அழகாக்கும் உன்னத நோக்கோடு களமிறங்கியுள்ளது.

இந்த திறப்பு விழாவில், பிக் பாஸ் நிகழ்ச்சியின் டைட்டில்வின்னர்திவ்யா கணேசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இந்த புதிய மையத்தைத் திறந்து வைத்தார்."உங்கள் புன்னகை, எங்கள் உறுதிமொழி" என்ற தாரக மந்திரத்துடன் துவங்கப்படும் இந்த கிளினிக், கோவை சாய் பாபா காலனி, ராஜா அண்ணாமலை ரோட்டில் உள்ள 'அப்ஸ்டைல் ஸ்டோர்ஸ்' கட்டிடத்தின் முதல் தளத்தில் அமையப் பெற்றுள்ளது.

பல் மாற்று அறுவை சிகிச்சை மற்றும் முகம் சார்ந்த சீரமைப்பு சிகிச்சைகளுக்கு 3D ஃபேஸ் ஸ்கேன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது இதுவே இந்தியாவிலேயே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் குகுடென்டல்கிளினிக்ஸ்' இயக்குனர்கள் டாக்டர் காயத்திரி ராஜு, டாக்டர். பூர்ணேஷ் கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாராபுரம் அடுத்த சந்திராபுரத்தில் ஏபிடி சொசைட்டி மற்றும் ஏபிடி சேவை மையத்தின் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணைய முறையை ஊக்குவிக்கவும், ஏபிடி யில்,விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து, விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றுவது காலத்தின் தேவையாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு, நவீன விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி, பயிற்சிகள், மாதிரி பண்ணைகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், கால்நடைக



சொசைட்டி மற்றும் ஏபிடி சேவை மையம்,தாராபுரம் அருகே உள்ள சந்திராபுரம் கிராமத்தில் தொடங்கப்பட்டது.

ஏபிடி குழுமத்தின் நிறுவனரும், பத்மபூஷன் விருது பெற்றவருமான அருட்செல்வர் டாக்டர் மகாலிங்கம் அவர்களின் சமூகப் பார்வை, விவசாய முன்னேற்றசிந்தனை மற்றும் கிராமப்புற வளர்ச்சிக் கனவுகளை முன்னெடுக்கும் வகையில்,சக்தி குழுமங்களின் நிர்வாக இயக்குநர் பாலசுப்ரமணியம் தலைமையில் இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது. இது குறித்து சக்தி குழுமங்களின் நிர்வாகஇயக்குநர்பாலசுப்ரமணியம் செய்தியாளர்களிடம் கூறியதாவது.. தற்போதைய சூழலில் விவசாயம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வரும் நிலை- அறிவியல் தொழில்நுட்பங்களுடன் கூடிய ஒருங்கிணை ந்த பண்ணைய முறைய விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் ஏபிடி சொசைட்டி மற்றும் ஏபிடி சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார், சந்திராபுரத்தை முன்மாதிரி கிராமமாக உருவாக்கி அதன் வெற்றியைத்தொடர்ந்துதமிழகம் முழுவதும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.இந்தசேவை மையத்தின் மூலம் காய்கறி சாகுபடி, கரும்பு, மஞ்சள், வாழை உள்ளிட்ட பயிர்கள், கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, கோழி,ஆடு,மீன்,காளான் மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற பல்வேறு துறைகளில் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களை ளுக்குத் தேவையான தரமான தீவனங்கள் மற்றும் உபகரணங்கள் ஏபிடி சேவை மையத்தின் மூலம் வழங்கப்படுவதோடு, கிராமப்புற குழந்தைகளுக்கான ஒற்றை ஆசிரியர் கல்வி மையங்கள் மற்றும் பெண்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் திறன் மேம்பாட்டு திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளனஎன்றார்.நிகழ்ச்சியில் வினோதினி பாலசுப்ரமணியம், சம்யுக்தா சங்கர் வாணவராயர், செல்வி சுருதி, அம்ரித் விஷ்ணு, நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், ஏபிடி சேவை மைய அலுவலர்கள், ஊழியர்கள், சந்திராபுரம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



# தாராபுரம் அடுத்த சந்திராபுரத்தில் ஏபிடி சொசைட்டி மற்றும் ஏபிடி சேவை மையத்தின் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணைய முறையை ஊக்குவிக்கவும், ஏபிடி சொசைட்டி மற்றும் ஏபிடி சேவை மையம், தாராபுரம் அருகே உள்ள சந்திராபுரம் கிராமத்தில் தொடங்கப்பட்டது.

ஏபிடி குழுமத்தின் நிறுவனரும், பத்மபூஷன் விருது பெற்றவருமான அருட்செல்வர் டாக்டர் மகாலிங்கம் அவர்களின் சமூகப் பார்வை, விவசாய முன்னேற்ற சிந்தனை மற்றும் கிராமப்புற வளர்ச்சிக் கனவுகளை முன்னெடுக்கும் வகையில்,சக்தி குழுமங்களின் நிர்வாகஇயக்குநர்பாலசுப்ரமணியம்தலைமையில் இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது. இது குறித்து சக்தி குழுமங்களின் நிர்வாக இயக்குநர் பாலசுப்ரமணியம் செய்தியாளர்களிடம் கூறியதாவது.. தற்போதைய சூழலில் விவசாயம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து, விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றுவது காலத்தின் தேவையாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு, நவீன அறிவியல் தொழில்நுட்பங்களுடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணைய முறைய விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் ஏபிடி சொசைட்டி மற்றும் ஏபிடி சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார், சந்திராபுரத்தை முன்மாதிரி கிராமமாக உருவாக்கி அதன் வெற்றியைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் இந்தத் திட்டத்தைவிரிவுபடுத்ததிட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த சேவை மையத்தின் மூலம் காய்கறி சாகுபடி,கரும்பு,மஞ்சள், வாழை உள்ளிட்ட பயிர்கள், கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, கோழி, ஆடு, மீன், காளான் மற்றும் தேனீ வளர்ப்பு போன்றபல்வேறு துறைகளில் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி, பயிற்சிகள், மாதிரி பண்ணைகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், கால்நடைகளுக்குத் தேவையான தரமான தீவனங்கள் மற்றும் உபகரணங்கள் ஏபிடி சேவை மையத்தின் மூலம் வழங்கப்படுவதோடு, கிராமப்புற குழந்தைகளுக்கான ஒற்றை ஆசிரியர் கல்வி மையங்கள் மற்றும் பெண்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் திறன் மேம்பாட்டு திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன என்றார். நிகழ்ச்சியில் வினோதினி பாலசுப்ரமணியம், சம்யுக்தா சங்கர் வாணவராயர், செல்வி சுருதி, அம்ரித் விஷ்ணு, நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், ஏபிடி சேவைமைய அலுவலர்கள், ஊழியர்கள், சந்திராபுரம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## தென்காசியில் இருந்து அதனை சுற்றியுள்ள பல்வேறு ஊர்களுக்கு

# நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க பொது மேலாளரை சந்தித்த டாக்டர். கலைகதிரவன் எம்.எல்.ஏ.



தென்காசி மாவட்ட தலைநகர் தென்காசியில் இருந்து அதனை சுற்றியுள்ள பல்வேறு ஊர்களுக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழகத்தின் மூலம் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற போது மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று வந்த சில பேருந்துகளை தற்போது நிறுத்தி வைத்துள்ளனர் அதனால்அப்பகுதிபொதுமக்கள் குறிப்பாக பள்ளி கல்லூரி செல்லும்மாணவமாணவிகள் பாதிக்கப்படுவதால் அப் பேருந்துகளை மீண்டும் அதே வழித்தடத்தில் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக திருநெல்வேலி கோட்ட பொது மேலாளர்அவர்களைநேரில் சந்தித்து மனு அளித்தார் இது பற்றிய விவரமாவது திருநெல்வேலி அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் திரு. சிவகுமார் அவர்களை தென்காசி சட்டமன்ற உறுப்பினர்மருத்துவர் கலை கதிரவன் எம்.பி.பி.எஸ் அவர்கள் நேரில் சந்தித்து தொகுதி மக்களின் கோரிக்கைகளான புதிய பேருந்து வசதி மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து சேவையை மீண்டும் இயக்குவது குறித்த கோரிக்கை மனுவை அளித்தார்கள். மனுவில் முத்தம்மாள்புரம், மாவிலியூத்து, அழகப்பபுரம், வேதம்புதூர், அய்யாபுரம், மின்நகர், அங்கராயன்குளம், ஆழ்வார்குறிச்சி, அரியப்பபுரம், இரட்டை குளம், துரைச்சாமிபுரம், பூப்பாண்டிபுரம், சுப்பையாபுரம்,

கருவந்தா, உச்சிபொத்தை, ஆகிய ஊர்களில் இருந்து சுரண்டை, தென்காசி, சங்கரன்கோவில், திருநெல்வேலி, ஆகிய ஊர்களுக்கு பள்ளி கல்லூரிகளுக்கு மாணவ, மாணவிகள், பொதுமக்கள் சென்றுவர ஏதுவாக புதிய பேருந்து வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும். மேலும் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் அதே வழிதடங்களில் இயக்க நடவடிக்கை எடுக்ககோரியும்அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் அவர்களிடம் மனுவாக கொடுத்தார்கள் மனுவை பெற்றுக் கொண்ட பொது மேலாளர் அவர்கள் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை விரைவாக எடுப்பதாக உறுதி அளித்தார்கள் உடன் மாநில தொமுச பேரவை துணைத் தலைவரும் திருநெல்வேலி மண்டல தொமுச பொதுச் செயலாளருமான தர்மன் மண்டல தொ.மு.ச தலைவர் முருகன் முன்னாள் சிக்கன நாணய சங்கத் தலைவர் .மகா விஷ்ணு , மாவட்டவர்த்தகஅணி அமைப்பாளர் சுரண்டை மா.முத்துக்குமார் , மற்றும்.சாய் ராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்



நாகர்கோவில் கலெக்டர் அலுவலக ரவுண்டான சாலையில் பாதாள சாக்கடை பணிக்காக கடந்த மாதம் தோண்டப்பட்டது. இந்நிலையில் இதுவரை இந்த இடத்தை சரிசெய்யாமல் விட்டதால் சாலையில் ஜல்லி கற்கல் பெயர்ந்து இருசக்கர வாகன ஓட்டிகள் சறுக்கி விபத்திற்குளாகும் நிலை உள்ளது. பெரும் விபத்துகள் ஏற்படும் முன் நாகர்கோவில் மாநகராட்சி மற்றும் காவல்துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை!!

# கல்லூரி மாணவிகள் நலன் கருதி பேருந்து நிறுத்தத்தை மாற்றி அமைக்க முன்னாள் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் சிவ பத்மநாதன் மாவட்ட ஆட்சியருக்கு வேண்டுகோள்



தென்காசி அருகே மகளிர் கல்லூரி பேருந்து நிறுத்தத்தை மாணவிகளை விபத்திலிருந்து காப்பாற்றும் பொருட்டு அந்த பேருந்து நிறுத்தத்தை 500 மீட்டர் தூரம் கல்லூரிக்கு அருகிலேயே அமைத்து தர வேண்டிதென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் திமுக செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாபன் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மனு கொடுத்துள்ளார் அம் மனுவில் கூறி இருப்பதாவது தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தாலுகா,கீழப்பாவூர்ஊராட்சிஒன்றியத்திற்குஉட்பட்ட கழுநீர்குளம் ஊராட்சி பகுதியில் தமிழ்நாடு அரசின் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தினமும் அரசு மற்றும் தனியார் பேருந்துகளை நம்பியே கல்லூரிக்கு வந்து செல்கின்றனர்.

இக்கல்லூரிக்கென அரசு மகளிர் கலைக்கல்லூரி பேருந்துநிறுத்தம்என்றபெயரில்அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிறுத்தம் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் (TNRSP) பணியின் போது கல்லூரி நுழைவுவாயிலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாணவியர்கள் நான்கு வழிச்சாலையை கடந்து பேருந்தில் ஏறவும்,இறங்கிய பின்னர் மீண்டும் சாலையைகடந்துகல்லூரிக்குச்செல்லவும்வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.மேற்கிலிருந்து கிழக்கே அதிவேகமாகவரும் வாகனங்களால் மாணவியர்கள் உயிருக்கு ஆபத்தான சூழலில் சாலையைக் கடக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே சில மாணவியர்கள் விபத்தில் சிக்கிகாயமடைந்துள்ளதாகவும், தினந்தோறும் அச்சத்துடன் கல்லூரிக்குச் சென்றுவருவதாகவும் கூறி பேருந்து நிலையத்தை கல்லூரி ஆர்ச் அருகே இடமாற்றம் செய்ய கல்லூரி தரப்பில்கோரிக்கையும்வைக்கப்பட்டுள்ளது.மேலும் இந்த பேருந்து நிலையம் பயன்பாடற்ற நிலையிலும் உள்ளது.

ஆகையால் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்கள் அருள்கூர்ந்து கல்லூரி மாணவியர்களின் உயிர் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசு கலைக்கல்லூரி பேருந்து நிறுத்தத்தை கல்லூரி நுழைவுவாயில் (ஆர்ச்) அருகே உடனடியாக இடமாற்றம் செய்து மாணவியர்கள் பாதுகாப்பாக பேருந்தில் ஏறி இறங்க தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகளுக்கு (TNRSP) ஆவண செய்திட கேட்டுக்கொண்டுள்ளார்.



மதுரை மாவட்டம் ஏழுமலை ஸ்ரீ மீனாட்சி ஜுவல்லர்ஸ் மற்றும் ஸ்ரீ ஜுவல்லரி இல்ல திருமண விழா நாகமலை புதுக்கோட்டை தனியார் திருமண மஹாலில் நடைபெற்றது. இதில் மணமக்கள் விக்னராஜா கௌசிகா பிரியதர்ஷினி ஆகியோருக்கு தென்னிந்திய வெள்ளாளர் உறவின்முறை சங்கத் தலைவர் தனவேலன் திருமணத்தை நடத்தி வைத்தார். சங்க நிர்வாகிகள் உறவினர்கள் நண்பர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா , மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.கல்லாணை அவர்கள், மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். தங்கப்பாண்டி அவர்கள், மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சோ.கார்த்திகேயன் அவர்கள்,சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.வி. கருப்பையா அவர்கள்,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.எம்.கோபிசன் அவர்கள், மதுரை மத்திய சட்டமன்ற உறுப்பினர் திரு.திரு.மதார் பதூருதின் அவர்கள், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. ம.விஜய் அவர்கள்,மாநகராட்சி மேயர்(பொ)/ துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள்,மாநகராட்சி ஆணையாளர் திரு. கௌரவ் குமார்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# விவசாயிகள் எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்த அக்ரி இன்டெக்ஸ் 2026 மாபெரும் கண்காட்சி

## கோவை கொடிசியா வளாகத்தில் வரும், 9ம் தேதி துவங்கி, 13ம் தேதி வரை நடைபெற உள்ளது



விவசாயத்துறையில், தற்போது வந்துள்ள புதிய புதிய யுக்திகள், தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில், கொடிசியா வளாகத்தில் விவசாயம் சார்ந்த கண்காட்சி நடத்த படுவது வழக்கம். இதன் தொடர்ச்சியாக இந்தியாவின் முதன்மையான வேளாண் கண்காட்சியின் 24வது பதிப்பு வரும் ஜூலை 9ம் தேதி முதல், ஜூலை 13ம் தேதி வரை கொடிசியா வளாகத்தில் நடைபெற உள்ளது. இக்கண்காட்சிக்கான விளம்பர பலகை வெளியீட்டு விழா, கோவை அண்ணாசிலை பகுதியில் உள்ள, கொடிசியா தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அப்பொழுது செய்தியாளர்களிடம் பேசிய அக்ரி இன்டெக்ஸ் 2026 கண்காட்சியின் தலைவர் ஸ்ரீ ஹரி, கூறியதாவது..

கொடிசியாஅக்ரி இன்டெக்ஸ் கண்காட்சியானது தற்போதைய இந்திய வேளாண்மை துறை சார்ந்து நடைபெறும் ஒரு மாபெரும் கண்காட்சியாகும். இந்த கண்காட்சியில் வேளாண்மை, தோட்டக்கலை, பால் பண்ணை தொழில், கோழி வளர்ப்பு, மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்த நவீன மேம்பாடுகளை காட்சி படுத்தும் ஒரு தளமாக விளங்குகின்றது. இந்த துறை சார்ந்த அறிவு பரிமாற்றம் தொழில்நுட்ப புத்தாக்கங்களை ஊக்குவித்தல், விவசாயிகளின் மேம்பாட்டுக்காக உதவுவதே இந்த கண்காட்சியின் நோக்கம் என்று தெரிவித்தார். சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சந்தை படுத்துதலுக்கான மாபெரும் வாய்ப்பையும், வணிக தொடர்புகளையும் தொழில்நுட்ப வருங்கினைப்பை வழங்குகின்றது என்று தெரிவித்தார். இதன் துவக்கவிழா நிகழ்ச்சியில் சக்தி சுகர்ஸ் தலைவர் டாக்டர் மாணிக்கம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பொறுப்பு துணை வேந்தர் டாக்டர் சுப்ரமணியன், மற்றும் துணை வேந்தர் பெலிக்ஸ் ஆகியோர் ரிப்பன் வெட்டி துவக்கி வைக்க உள்ளதாக தெரிவித்தார் இந்த நிகழ்ச்சியில் அக்ரி இன்டெக்ஸ் 2026 கண்காட்சியின் துணைத் தலைவர் விஜயகுமார், கொடிசியா தலைவர் ரங்கசாமி, கொடிசியா செயளாலர் விஜய் ஆனந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதி,சுருளோடு ஊராட்சி கூவைக்காடு மலைவாழ் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளான தெருவிளக்கு, பேருந்து வசதி,சாலை வசதி மற்றும் தொலைதொடர்பு வசதி ஆகியவற்றை செய்து தர கேட்டு இன்று WE THE LEADERS இயக்கத்தின் சேவகரும்,முன்னாள் முன்னாள் மீன்வளத்துறை சேர்மனுமாகிய சகாயம் தலைமையில் அப்பகுதி மலைவாழ் மக்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட பிஎஸ்என்எல் பொது மேலாளர் அலுவலகம்,மாவட்ட போக்குவரத்துக் கழக அலுவலகம் உள்ளிட்ட அதிகாரிகளிடம் மனு அளித்தனர்தங்கள் பகுதியில் பிஎஸ்என்எல் செல்போன் டவர் இருந்தும் சரியான சிக்னல் இல்லாததால் பள்ளி கல்லூரி மாணவர்கள் இணைய வழி கல்விகற்க சிரமப்படுவார்கள் உம், தொலைதொடர்பு துண்டிக்கப்படுவதாக குற்றச்சாட்டு.



ஈரோடு மாவட்டம்சிவகிரிபேரூராட்சிக்கு உட்பட்ட வேட்டுவபாளையம் மின்மயானம் பகுதியில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டிருந்தது. இதனை ஏற்ற சிவகிரி பேரூராட்சி மன்றத் தலைவர் பிரதீபா கோபிநாத், பணியாளர்களைக் கொண்டு நேற்று (ஜூலை.3) கண்காணிப்பு கேமராவை அமைத்து கொடுத்து கோரிக்கையை நிறைவேற்றினார்.

# நந்தா பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு துவக்க விழா



ஈரோடு நந்தா பாலிடெக்னிக் கல்லூரியின் 29ஆம் கல்வியாண்டிற்கான முதலாமாண்டு மாணவர்களின் வரவேற்பு விழா இனிதே நடைபெற்றது. இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

மேலும், இவ்விழாவில் ராணுவத்தின் வான் வழியில் பயன்படுத்தப்படும் மின்னணு மற்றும் தொடர்பியல் துறைக்கு தேவையான திர்வுகளை அளித்துவரும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான "டேட்டா பார்டன்" நிறுவனத்தின் மூத்த மனிதவள மேலாளர் வி. உதயகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையேற்று சிறப்புரையாற்றுகையில், 32 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எங்களது கல்வி நிறுவனம் இன்று மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துமனை வரை சுமார் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள். மேலும், ஒழுக்கத்துடன் கூடிய கல்வி அளித்து வருவதன் அடிப்படையில் ஸ்பிக் கெமிக்கல்ஸ், பிரேக்ஸ் இந்தியா,லூக்கஸ் டிவிஎஸ், ராயல் என்பீல்ட், எம்.ஆர்.எஃப் டயர்ஸ்போன்ற132க்கும் மேற்பட்ட நிறுவன ங்களில் கடந்த கல்வியாண்டில் நூறு சதவீத மாணவர்கள் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளார்கள் என்பதனை மிகவும் பெருமிதத்துடன் கூறினார்.

இத்தகைய வளர்ச்சிக்கு இங்கு பணிபுரிந்து வரும் முதல்வர்கள்,நிர்வாக அலுவலர்கள், பேராசியர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்கள் அவர்தம் பெற்றோர்களின் ஒத்துழைப்பே மிக முக்கிய காரணங்கள் என்று தெரிவித்தார்.

அதுபோல் நீங்களும் நல்ல சிந்தனைகளோடு விடாமுயற்சியுடன்கல்வி பயின்று நல்லதொரு நிறுவனத்தில் வேலைவாய்ப்பினை பெற வேண்டும் என்றும், அதன் மூலம் வாழ்வில் ஆரோக்கித்துடன் வளம்பெற்று மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்றும் கூறி புதியதாக இணைந்த மாணவ மாணவிகளுக்கும், அவர்தம் பெற்றோர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத்தெரிவித்தார்.

முன்னதாக விழாவில் கலந்து கொண்ட மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் கல்லூரியின் முதல்வர் ஜீ. மோகன்குமார் வரவேற்று பேசினார்.

இதனைத்தொடர்ந்து, "டேட்டாபார்ட்டன்" நிறுவனத்தின் மூத்த மனிதவள மேலாளர்வி.உதயகுமார் சிறப்புரையாற்றுகையில், எங்களது நிறுவனம் கடந்த 15 ஆண்டுகளாக நந்தா கல்லூரியில் பயிலும் மாணவர்களை வளாகத்தேர்வின் மூலம் திறமை வாய்ந்த மாணவர்களை தேர்ந்தெடுத்து பணியில் அமர்த்தி வருகிறோம் என்று புதிய மாணவர்களாகிய உங்களுடன்பகிர்ந்துகொள்வதில் பெருமையடைவதாகக் கூறினார். இதற்கு நந்தா கல்லூரியில் மனப்பான்மை, நடத்தை மற்றும் நல்ல குணங்கள் ஆகிய மூன்றும் திறம்பட கற்றுக் கொடுப்பதே முக்கிய காரணங்கள் ஆகும். ஏனெனில் கடந்த ஆண்டுகளில் வளாகத்தேர்வின் மூலம் பணியமர்த்தப்பட்ட மாணவர்கள் 90 சதவீதம் நல்ல நிலைமையில் குடும்பத்துடன் வாழ்க்கையில் நிலைத்துவிட்டனர் என்பதே சான்று என்று கூறி புதியதாக இணைந்த மாணவர்களுக்கு தனது வாழ்த்தினைத் தெரிவித்தார்.

மேலும், இவ்விழாவில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அங்கத்தினரான எஸ். திருமூர்த்தி, நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி, மற்றும்

தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் முனைவர் ச.நந்தகோபால் ஆகியோர் மாணவ, மாணவியர்களை வாழ்த்திப் பேசினார்கள்.

முடிவில், கடந்தாண்டு வாரிய தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

இவ்விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அங்கத்தினரான செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப் மற்றும் தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.



ஈரோடு மாவட்டம், வில்லரசம்பட்டி, சிவபுரம் பகுதியில் உள்ள சமூகநீதி கல்லூரி மாணவர்கள் விடுதியில் அடிப்படை வசதிகள் குறித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வே.சம்பத்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோடு மாவட்டத்தில் 5 வயது முதல் 16 வயது வரை உள்ள மாணவர்களுக்கு இலவசமாக கலைப்பயிற்சி

## கலெக்டர் ச.கந்தசாமி தகவல்





தமிழ்நாடு அரசின் கலைப் பண்பாட்டுத்துறையின் தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் 60 இடங்களில் சவகர் சிறுவர் மன்றங்கள் செயல்பட்டு வருகிறது. இம்மன்றங்களில் 5 வயது முதல் 16 வயது வரை உள்ள மாணவ, மாணவியர்களுக்கு அந்தந்த வட்டார பகுதிகளில் பயன்பாட்டில் இருந்து வரும் செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைகளில் (குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம், யோகா, நாட்டுப்புற நடனம், சிலம்பம், ஜிம்னாஸ்டிக், ஓவியம், மற்றும் கைவினை) ஏதேனும் நான்கு கலைகளில் கலைப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 5 முதல் 16 வயது வரை உள்ள மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு இலவசமாக கலைப்பயிற்சியினை பெறலாம்.

இதற்காக ஆண்டுடொன்றுக்கு பதிவு கட்டணமாக மிக குறைந்த தொகையாக ரூ.200/- மட்டும் (ஜுன் முதல் ஏப்ரல் வரை) உறுப்பினர் கட்டணமாக செலுத்த வேண்டும்.

இக்கலைப் பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று வரும் மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி பொருட்கள் கலைப் பண்பாட்டுத்துறையால் வழங்கப்படுகிறது. மேலும் இங்குபயிற்சிபெற்று வரும் மாணவர்கள் கலை பண்பாட்டுத்துறையால் நடத்தபடும் மாவட்ட அளவிலானகலைப்போட்டிகள், பயிற்சி முகாம்கள் மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் கோடைக்கால பயிற்சி முகாம், குளிர்கால கைவினை கலைப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது.

மாவட்ட கலைப்போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடம் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு துறையில் நடத்தப்படும் மாநில அளவிலான கலைப் போட்டிகளில் பங்கு பெறுவதற்கும் புதுடெல்லியில் நடைப்பெறும் தேசிய அளவிலான கலைப் போட்டிகளில் பங்கு பெறுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்படுகிறது. இறுதியாக வெற்றி பெறும் மத்திய அரசின் தேசிய விருதான பாலஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. இப்போட்டிகளில் பங்கு பெற சென்று வருவதற்கான போக்குவரத்து, உணவு செலவினம் ஆகியவை கலை பண்பாட்டுத்துறைால் வழங்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளி வளாகத்திலும், கோபிசெட்டிபாளையம் டைமண்ட் ஜூப்ளி பிரைமரி பள்ளி வளாகத்திலும் சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரை, ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை குரலிசை, பரதநாட்டியம், ஓவியம், கீபோர்டு மற்றும் சிலம்பம் ஆகிய கலைபயிற்சி வகுப்புகள் நடைபெறுகிறது. ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கலை ஆர்முள்ள குழந்தைகள் இந்த இலவச கலைப்பயிற்சி பெற்று பயனடையுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார். மேலும் இவ்வகுப்புகளில் சேர 9994661754 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீடு தேடி ரேஷன் பொருட்கள் வழங்கல் ஈரோடு ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு.



ஈரோடு மாவட்டத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் ஜீலை மாதம் 04.07.2026 ,05.07.2026 ,06.07.2026 ஆகிய தேதிகளில் 70 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கப்படும். தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்கள் இத்திட்டத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஈரோடு ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் பத்ரகாளி அம்மன் திருக்கோயிலில் ஆனி மாத வெள்ளிக்கிழமையான நேற்று (ஜூலை.3) அம்மனுக்கு சிறப்பு அலங்கார பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் பால், பன்னீர், தேன், இளநீர் உள்ளிட்ட அஷ்ட திரவியங்களால் அம்மனுக்கு அபிஷேகமும், பூக்களால் அலங்காரமும் நடைபெற்றது. பின்பு, சகஸ்ரநாம அர்ச்சனை சொல்லி தீபாராதனை காட்டப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை உள்ள சமூகநீதி பள்ளி மாணவியர் விடுதியில் மாணவியருக்கு வழங்கப்படும் காலை உணவினை சாப்பிட்டுப்பார்த்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வே.சம்பத்குமார் நேற்று (3.7.2026) ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டத்தில் திண்டல் வேலாயுதசுவாமி திருக்கோயில் வளாகத்தில்

# 582 ஒருகால பூஜை திருக்கோவில்களுக்கு பூஜை உபகரணங்களை அமைச்சர் ம.விஜய் பாலாஜி வழங்கினார்



ஈரோடு மாவட்டம், திண்டல் அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் 582 ஒருகால பூஜை திருக்கோவில்களுக்கான பூஜை உபகரணங்களை கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி (02.07.2026) அன்று வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்று சேர வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு சிறப்பு மிகு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ஒருகால பூஜை முறையாக செய்வதற்கு தேவையான உபகரணங்களை துறையின் மூலம் ஒவ்வொரு திருக்கோயில்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் உள்ள 582 ஒருகாலபூஜை திருக்கோவில்களின் பூஜைக்கு தேவையான பித்தளை உபகரணங்களான காமாட்சி விளக்கு, தூபக்கால், பஞ்சபாத்திரம், பூஜைதட்டு, தீர்த்த சொம்பு, தட்டு, மணி என மொத்தம் 7 எண்ணிக்கையில் தலா ஒரு திருக்கோயிலுக்கு ரூ.5800 மதிப்பீட்டிலான பூஜை உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியினை திண்டல் அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர்திருக்கோயில் பூசாரிகள் மற்றும் அர்ச்சகர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உதவி ஆணையர் சுகுமார், திண்டல் முருகன் கோவில் செயல் அலுவலர் ஜீவலட்சுமி, சரக ஆய்வாளர்கள் (ஈரோடு) ஆதிரை, (பெருந்துறை) ஸ்ரீகுகன், கோவில் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

அண்ணா அறிவாலயத்தில்

# மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற ஈரோடு தி.மு.க. நிர்வாகிகள்



சென்னை அண்ணா அறிவாலயத்தில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலினை, ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய திமுக நிர்வாகிகள் அடுத்தடுத்து நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்த சந்திப்புகள் அனைத்தும் முற்றிலும் மரியாதை நிமித்தமாக நடைபெற்றன. முதலாவதாக, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக பொருளாளரும் ஈரோடு மாநகராட்சி ஒன்றாம் மண்டல தலைவருமான ப.க.பழனிச்சாமி, கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலினை நேரில் சந்தித்து தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

அப்போதுஅவர்தலைவரிடமிருந்து அன்பான வாழ்த்துகளையும் ஆசிகளையும் பெற்றுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது கட்சியின் முக்கிய நிர்வாகிகள் சிலர் உடனிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, ஈரோடு வீரப்பன்சத்திரம் திமுக பகுதி செயலாளர் வி.சி.நடராஜன், கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்தார். அவரும் தலைவருக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்து, அவரிடமிருந்து மனமார்ந்த வாழ்த்துகளையும் ஆசிகளையும் பெற்றுக் கொண்டார். இந்த சந்திப்பின் போது முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான சு.முத்துசாமி உடனிருந்தார். அதேபோல், ஈரோடு சூரம்பட்டி திமுக பகுதி செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசனும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது அவர் கட்சித்தலைவருக்குத்தனது வாழ்த்துகளைக் கூறி, அவரிடமிருந்து வாழ்த்துகளையும் ஆசிகளையும் பெற்றுக்கொண்டார். இந்தச் சந்திப்பின் போதும் முன்னாள் அமைச்சரும் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான சு.முத்துசாமி உடன் இருந்து சிறப்பித்தார். ஈரோடு மாவட்ட திமுக நிர்வாகிகளின் இந்த அடுத்தடுத்த சந்திப்புகள் கட்சி வட்டாரத்தில் பெரும் நெகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கண் சிகிச்சை பிரிவில்

# பிறவியிலேயே இடது கண் இல்லாமல் பிறந்த 9 வயதுச் சிறுமிக்கு அரிதான கண் குழி சீரமைப்பு மற்றும் செயற்கை கண் பொருத்தும் அறுவை சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது



தூத்துக்குடி அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண் சிகிச்சைபிரிவில்,துறைத் தலைவர் உட்பட நான்கு மருத்துவர்கள், பதினைந்துக்கும் மேற்பட்ட செவிலியர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றி வருகின்றனர். இங்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தினமும் சுமார் 200-க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

இத்துறையில் ஒவ்வொரு மாதமும் சுமார் 200-க்கும்மேற்பட்ட கண் புரை அறுவைச் சிகிச்சைகள் தங்குதடையின்றி செய்யப்படுகின்றன. மேலும் கண் நீர் அழுத்த நோய், மாறுகண்,கண்நீர்பைஅறுவை சிகிச்சை,கருவிழி மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் கண் குழி அறுவை சிகிச்சைகள் போன்ற அதிநவீன சிகிச்சைகளும் இங்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

நாகர்கோவில் ஆரல்வாய்மொழியைச் சேர்ந்த பொன்னு என்பவரின் மகள் முத்துசெல்வி (9). இக்குழந்தை பிறவியிலேயே இடது கண் இல்லாமல் பிறந்துள்ளது. இச்சிறுமிக்கு மருத்துவக் கல்லூரி முதல்வர்எபனேசர் ஜோயல் குமார், துணை முதல்வர் கலைவாணி, மருத்துவமனை கண்காணிப்பாளர் பத்மநாபன் மற்றும் இருப்பிட மருத்துவர்சைலஸ்ஜெயமணி ஆகியோரின் உத்தரவின் பேரில், கடந்த ஜூன் 20 அன்று தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதி அளிக்கப்பட்டது. கண் பிரிவு துறைத் தலைவர் (பொறுப்பு) மற்றும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கதிட்ட மேலாளருமான டாக்டர் ரீட்டா ஹெப்சிராணி தலைமையில், பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர் அருணா தேவி, மயக்கவியல் மருத்துவர் ஸ்ரீராம் மற்றும் மருத்துவர்கள் அஜய் சந்தோஷ் டேவிட்,ஜெயந்தி,வின்சா, திவ்யா, செவிலியர்கள் சுரேகா,ரத்னாஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவினர் இச்சிறுமிக்குக் கண் குழி சீரமைப்பு மற்றும் செயற்கை கண் பொருத்தும் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச்செய்துமுடித்தனர்.

மிகவும் அரிதாகச் செய்யப்படும் இந்த அறுவை சிகிச்சை குறித்து மருத்துவக் குழுவினர் கூறுகையில், "பிறவியிலேயே கண் பார்வை இல்லாத ஒருவருக்கு முழுமையான பார்வைத் திறனை மீட்டுத் தருவது மருத்துவ ரீதியாக 100 சதவீதம் சாத்தியமற்றது. எனினும், இந்த அதிநவீன சீரமைப்பு அறுவை சிகிச்சையின் மூலம், அந்தச் சிறுமிக்கு இயற்கையாகவே கண் இருப்பது போன்ற தோற்றம் தற்போதும், வருங்காலத்திலும் முழுமையாக உண்டாகும். இதன்மூலம் முகத்தில் இருந்த பிறவிக்குறைபாடு மறைந்து, சமூகத்தில் அந்தச் சிறுமிக்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்படாமல் தடுத்து, நல்வாழ்வு வாழ வழிவகை செய்யப்பட்டுள்ளது" என்றனர்.

இந்த அரிய சாதனையை நிகழ்த்திய கண் மருத்துவக் குழுவினரை மருத்துவக் கல்லூரியின் அனைத்துத் துறைப் பேராசிரியர்களும், மருத்துவர்களும், செவிலியர்களும் நேரில் பாராட்டினர். மேலும், பொதுமக்கள் தங்களுக்கு ஏற்படும் அனைத்து விதமான நோய்களுக்கும் அரசு மருத்துவர்களை நாடி உரியபலன்களைப்பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவமனை நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# சி.வி.சண்முகத்துக்கு உடனடியாக ஆயுதம் ஏந்திய பாதுகாப்பு: டிஜிபிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு



சென்னை: அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு உடனடியாக ஆயுதம் ஏந்திய பாதுகாப்பு வழங்க தமிழ்நாடு டிஜிபிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிமுகவை சேர்ந்த முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்எல்ஏவுமான சி.வி.சண்முகம் தாக்கல் செய்திருந்த மனுவில், கடந்த 2006 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின் போது தன்னைகொல்லஎதிர்க்கட்சியினர் முயற்சித்த தாகவும்,அப்போதுதனது சகோதரரும், மைத்துனரும் உயிரிழந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துக்குப் பின், தனக்கும், தனது வீட்டுக்கும் போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்ட நிலையில் 2021ஆம் ஆண்டு பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டதாகவும்,இதைஎதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அச்சுறுத்தல் உள்ளதால்பாதுகாப்புவழங்குவது குறித்து மறுபரிசீலனை செய்ய உத்தரவிட்டிருந்தது எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது தொடர்ச்சியாக மிரட்டல்கள் வருவதால் இதுசம்பந்தமாக சென்னை, விழுப்புரம் மாவட்ட காவல் நிலையங்களில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், இதுசம்பந்தமான வழக்குகளையும், புகார்களையும் சிபிஐக்கு மாற்ற உத்தரவிடவேண்டும்எனமனுவில்கோரியுள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.கே. இளந்திரையன் பிறப்பித்துள்ள உத்தரவில், தொடர்ச்சியாக மிரட்டல்கள் வருவது குறித்து வெவ்வேறு விதமான குற்றச்சாட்டுகளுடன் சி.வி.சண்முகம் புகார் அளித்துள்ளதால் அதனை சிபிஐக்கு மாற்ற வாய்ப்பில்லைஎனகூறியுள்ளார். தொடர்ச்சியாக கொலை மிரட்டல் வருவதால் தனக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவையை சி.வி.சண்முகம் நிரூபித்துள்ளதாக கூறிய நீதிபதி, அவருக்கு உடனடியாக ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டுமென டிஜிபிக்கு உத்தரவிட்டுள்ளார்.

# வெனிசூலா பூகம்ப இடிபாடுகளில் 8 நாட்கள் சிக்கிய நபர் 100 மணி நேரத்துக்கு பின் மீட்பு



கராகஸ்: வெனிசுலா நாட்டில் கடந்த வாரம் அடுத்தடுத்து ஏற்பட்ட சக்திவாய்ந்த பூகம்பங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 3,000-த்தை நெருங்கி உள்ளது.

இந்நிலையில், அங்கு இடிபாடுகளில் சிக்கியிருந்த ஒருவரை சுமார் 8 நாட்களுக்குப் பிறகு, மீட்புக் குழுவினர் 100 மணி நேரம் போராடி உயிருடன்மீட்டுள்ளனர்.

தென் அமெரிக்க கண்டத்தில் வெனிசுலா அமைந்துள்ளது. அந்த நாட்டின் யாராகுய் மாகாணம், சான்பெலிப் நகரில் கடந்த 24-ம் தேதி மாலை 6 மணி அளவில் (இந்திய நேரப்படி வியாழக்கிழமை அதிகாலை 3.35 மணி) சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அலகில் 7.2 ஆகப் பதிவானது.

அடுத்த40விநாடிகளில் யுமரே நகரில் 2-வது மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அலகில் 7.5 ஆகப் பதிவானது. முதல் பூகம்பம் ஏற்பட்ட சான் பெலிப் நகரில் இருந்து 16 கி.மீ. தொலைவில் யுமரே நகர் அமைந்துள்ளது. பூகம்பம் காரணமாக அந்த நாட்டில் பல்வேறு நகரங்களில் உள்ள மக்களின் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட கட்டிடங்கள் சேதமடைந்தன. இதன் இடிபாடுகளில் சிக்கி சுமார் 3,000 பேர் உயிரிழந்தனர். இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டவர்கள் மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். சுமார் 10,000 பேர் மாயமாகி உள்ளனர். பூகம்பம் ஏற்பட்டு சுமார் ஒரு வார காலம் கடந்த நிலையில் அங்கு மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், வெனிசுலாவின் லா குய்ரா நகரில் இயங்கி வந்த ஷாப்பிங் சென்டரில் காவலாளியாக பணியாற்றி வந்த 43 வயதான கில் ஃப்ளோரஸ், பூகம்ப இடிபாடுகளில் சிக்கினார். நிலநடுக்கம் அதிர்வுகள் ஏற்பட்ட போது காவலாளிக்கான அறையில் அவர் இருந்துள்ளார். தொடர்ந்து அந்த கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது. அதன் இடிபாடுகளில் அவர் சிக்கினார்.

இந்நிலையில்,கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் உயிரோடு இடிபாடுகளில் சிக்கி இருப்பது தெரியவந்தது. இதையடுத்து மீட்பு பணியில் ஈடுபட்டுவரும்பன்னாட்டு குழுவினர், அவரை போராடி மீட்டுள்ளனர். மிகவும் சவாலான இந்த பணியின் போது, தன்னை மீட்கும்வரையில்தான் உயிரோடு இருப்பது குறித்து தனது மனைவிக்கு தெரிவிக்க வேண்டாம் என கில் ஃப்ளோரஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தச் சூழலில் அவரை பத்திரமாக மீட்புக் குழுவினர் மீட்டனர். அவர் சிக்கிய பகுதியில் கட்டிட இடிபாடுகள் அதிகம் இருந்த காரணத்தால் மீட்புப் பணி சற்று தாமதமாக தகவல் கிடைத்துள்ளது. அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# Govt orders removal of 3 battery management apps used to halt erickshaws: Sources



*The government has ordered a takedown of three mobile applications allegedly being used to abruptly stop e-rickshaws or battery-operated vehicles on roads, sources told HT.*

*Three such applications - BAT-BMS, Lossigy, and Epoch-i-ion, have been ordered to be removed, and any other such apps being misused will also be blocked, sources further said. The takedown order comes amid concerns over these applications, after videos showed people using them to approach e-rickshaws and switch them off mid-journey.*

*Lossigy, which happens to be one of the three apps ordered for removal, can be used to locate an e-vehicle nearby and disable it with a single tap. HT had downloaded the application with consent from one of the drivers and used it to stop an e-rickshaw.*

*According to drivers, the e-rickshaws have long been susceptible to this problem but it has surged recently after videos of people filming themselves pausing the e-rickshaw went viral. The logic behind these applications is similar to how Bluetooth devices work, with without the need to connect through any password or authentication. In some of these systems, anyone within Bluetooth range can download the app, connect to a nearby vehicle, and cut its power with one tap.*

*According to the BAT-BMS app's description on Google Play Store, these are the features it can provide: Connects to compatible Bluetooth-enabled lithium batteries.*

*Displays real-time battery status, including charge level (SOC), voltage, current, temperature, cycle count, and cell health.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.